## அறிவை வளர்க்கும் பள்ளியில் த.வெ.க.வின் அரசியல் ஒளிபரப்பா?

# தரங்கெட்ட செயலை உடனே தடுத்து நிறுத்துங்கள்!

### த.வெ.க. அமைச்சருக்கு தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!




சென்னை, ஜூலை 12–

பள்ளிக்கூடம் அறிவை வளர்க்கத்தான், உங்கள் அரசியல் புகழ் பாடுவதற்கு அல்ல.

தொடர்ந்து அரசுப் பள்ளிகளில் தங்கள் அரசியல் கைவரிசையைக் காட்டி வந்த த.வெ.க.வினர், இன்று உச்சகட்டமாக முதலமைச்சர் விஜய் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்து அராஜகம் செய்துள்ளனர். சிறு பிஞ்சு நெஞ்சுகளில் உங்கள் சுயநல அரசியல் நஞ்சை விதைக்க உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்?

ராஜ்மோகன் அவர்களே, ஆங்கரிங் வேலை செய்வதற்கு மட்டும்தான் இருக்கிறீர்களா அல்லது உண்மையிலேயே நீங்கள்தான் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரா? பள்ளி வளாகத்தில் அரசியல் செய்யக்கூடாது என்று ஊடகங்களுக்கு ஒப்புக்குப் பேட்டி கொடுத்துவிட்டு, திரைமறைவில் நாடகமாடுவதை நிறுத்துங்கள். உங்கள் வெற்று பேட்டிகளால் இங்கே எந்த மாற்றமும் வரப்போவதில்லை. குழந்தைகளிடம் அரசியல் விளம்பரம் தேடும் இந்தத் தரங்கெட்ட செயலை செயலிலும் தடுத்து நிறுத்திக் காட்டுங்கள்.

அரசியல் செய்ய ஆயிரம் மேடைகள் இருக்கின்றன, அங்கே போய் உங்கள் புகழைப் பாடிக்கொள்ளுங்கள். வகுப்பறைகளை உங்கள் சுய விளம்பரக் களமாக மாற்ற நினைத்தால் தமிழ்நாட்டு மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

## தி.மு.க. அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் முடக்கம்!

# சமூக வலைதளங்கள் மூலம் 'ரீல்ஸ்' போட்டு மக்களை ஏமாற்றும் 'அல்காரிதம்' ஆட்சி!

### சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு குற்றச்சாட்டு!



நெல்லை, ஜூலை 12-

தி.மு.க. அறிவித்த மக்கள் நல திட்டங்கள் முடக்கப்படுகிறது. யூடியூப், இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளம் மூலம் 'ரீல்ஸ்' போட்டு மக்களை ஏமாற்றும் த.வெ.க.அரசு 'அல்காரிதம்' ஆட்சி தமிழகத்தில் நடைபெறுகிறது. என்றும் மேகதாது அணை விவகாரம், கன்னியாகுமரியில் அணுக்கனிம சுரங்கங்களுக்கு அனுமதி அளித்தது, சிறுபான்மையினருக்கான 3.5 சதவீத இடஒதுக்கீடு மற்றும் தேவாலயம்/மசூதி கட்ட அனுமதிப்பதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பிரச்சனைகளில் தமிழக மக்களுக்கு எதிராகவே த.வெ.க. அரசு செயல்படுகிறது.என நெல்லையில் முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு நிரந்தர பணியாளர்களை நியமிக்க வேண்டுவது, சர்வதேச விளையாட்டு மைதானம் உள்ளிட்ட திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தி முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு நெல்லை மாவட்ட ஆட்சியர் அனந்த மோகனை நேரில் சந்தித்து மனு அளித்தார்.

பின்னர் முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் முந்தைய தி.மு.க.ஆட்சிக்காலத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, 200 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்ட மாவட்ட தலைமை மருத்துவமனை முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த மருத்துவமனையில் தற்போது வரை நிரந்தர பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை, சுமார் 90 செவிலியர்கள், 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படும் நிலையில், தற்காலிக பணியாளர்களைக் கொண்டு இயங்குவதால் மாவட்டத்தின் பிற மருத்துவமனை களும் பாதிக்கப்படுகிறது. உடனடியாக நிரந்தர பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

மேலும் இராதாபுரம் அருகே விஜயாபதி கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானப் பணிகள், சண்முகபுரம் உயர்நிலைப் பள்ளியில் 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டும் பணி மற்றும் வள்ளியூரில் 'ஒன் ஸ்டாப் சென்டர்' பணிகள் ஆகியவை தற்போதைய ஆட்சியில் சுணக்கம் கண்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம். இந்த கோரிக்கைகள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும். தற்போது தமிழகத்தில் நடக்கும் ஆட்சி அல்காரிதம் ஆட்சி யூடியூப், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்கள் மூலம் 'ரீல்ஸ்' போட்டு மக்களை நம்ப வைக்கும் ஆட்சி.

முன்னாள் அமைச்சர் உதயகுமார் அவர்கள் கூறியது போல,டாஸ்மாக்கில் 800 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகவும், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார், அந்த குற்றச்சாட்டை நானும் வழிமொழிகிறேன். வழக்கறிஞர்கள் நியமனத்தில் ஊழல் நடந்துள்ளதாக த.வெ.க. வினரே கூறுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடுதல் குழுவில், யுஜிசி உறுப்பினர்களைச் சேர்ப்பது மாநில உரிமைகளைப் பறிக்கும் செயல், 2014 - 16 முதல் ஒன்றிய அரசு யுஜிசி நிதியை முறையாக வழங்கவில்லை.அதற்குப் பதிலாக ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தைப் புகுத்த ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. துணைவேந்தர் நியமனத்தில் யுஜிசி உறுப்பினர்களை சேர்க்க ஒப்புதல் அளித்துள்ள எதாக மாநில சுயாட்சிக்கு எதிராக இருக்கும் அமைச்சர் கூறியுள்ளார். இதுபோன்று ஒன்றிய அரசுக்கு பயந்து மாநில அரசு மேகதாது அணை விவகாரம், கன்னியாகுமரியில் அணுக்கனிம சுரங்கங்களுக்கு அனுமதி அளித்தது, சிறுபான்மையினருக்கான 3.5 சதவீதம் இடஒதுக்கீடு மற்றும் தேவாலயம்/மசூதி கட்ட அனுமதிப்பதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பிரச்சினைகளில் தமிழக மக்களுக்கு எதிராகவே த.வெ.க. அரசு செயல்படுகிறது.

அதானி போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை ஒன்றிய அரசு தாரை வார்ப்பது போல் பல்கலைக் கழகங்களும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான முயற்சி நடக்கிறது. கடந்த 59 நாட்களில் இந்த அரசு மக்கள் நலனைப் புறக்கணித்து, ஒன்றிய அரசின் நிழல் அரசாகச் செயல்படுகிறது. அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு கூறினார்.

அப்போது ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, பி.சி.ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## 'மகளிர் விடியல் பயணம்' திட்டம் பெயர் மாற்றம்!

# தமிழ்நாட்டை இருண்ட காலத்திற்கு கொண்டு செல்லும் த.வெ.க. அரசு!

### முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் கடும் கண்டனம்!



தூத்துக்குடி, ஜூலை 11 -

முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. அரசு கொண்டு வந்த 'மகளிர் விடியல் பயணம்' திட்டத்தை 'மகளிர் பயணம்' எனப் பெயர் மாற்றியிருக்கிறது த.வெ.க. அரசு.

அ.தி.மு.க.வின் 10 ஆண்டுகால ஆட்சியால் இருண்டு கிடந்த தமிழ்நாட்டுக்கு விடியலை கொடுத்தது நமது தி.மு.க. அரசு.

தற்போதைய த.வெ.க. அரசு, மீண்டும் தமிழ்நாட்டை இருண்ட காலமாக மாற்றப் போவதால் 'விடியல்' என்ற சொல்லை அவர்களாகவே நீக்கியிருக்கிறார்கள் போல..! மகளிர் விடியல் பயணத்தில் விடியலை தூக்கியவர்கள், வரும் நாட்களில் மகளிர் பயணம்' என்ற சொற்களையும் தூக்கிவிட்டு இத்திட்டத்தையே நிறுத்திவிடுவார்களோ என்ற அச்சம் பெண்களிடையே மேலோங்குகிறது.

மாற்றம் என்று த.வெ.க.வினர் கூறியது பெயர் மாற்றம்தான் போல!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் கூறியுள்ளார்.

## மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் – கொளத்தூர் கிழக்குப் பகுதி

# 68 (அ) வட்டக் கழகச் செயலாளர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!



சென்னை, ஜூலை 12–

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ். சிவக்குமார் எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ.வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நேற்று (11.7.2026 – சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இம்மணவிழா இன்று (12.07.2026 – ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி,கே.சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி. சிவசங்கர் எம்.எல்.ஏ. எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ, பா.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி, பி.டி.சி.செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், எம்.கே.மோகன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல் மற்றும் குமரி விஜயா, பி.கே.மூர்த்தி, எம்.சி, கார்த்திக் மோகன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், பி.டி.சி. வெ.பாலு, கே.ராஜா குப்புசாமி, கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமலு எம்.சி, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், லயன் பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகனகிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

## படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரை! காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர்

# மலர்விழி தமிழ் அமுதன் இல்ல மணவிழா வரவேற்பு!

### டி.ஆர்.பாலு எம்.பி. - தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

காஞ்சிபுரம், ஜூலை 12 -

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், ஆதனூர் முதல் நிலை ஊராட்சி மன்றத் தலைவர் டி.தமிழ் அமுதன் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் மலர்விழி தமிழ் அமுதன் ஆகியோரின் புதல்வர் நவீன் (அ) டி. சூர்யா வுக்கும், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் தாலுகா, தேசுமுகிபேட்டை வெள்ளக்குளம் ஏ.பழனி - வசந்தா பழனி ஆகியோரின் புதல்வி அஸ்வினி (எ) பி.ஹரினிக்கும் மணவிழா இன்று (12.07.2026 - ஞாயிறு ) காலை 9 மணியளவில் கரசங்கால் - படப்பை ரோடு, எம்.ஜி. ஆர். நகரில் அமைந்துள்ள ஹர்ஷா கார்டன்ஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நேற்று (11.07.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் தேனிசைத் தென்றல் தேவா, ஸ்ரீகாந்த் தேவா ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் நடைபெற்றது.

இம்மணவிழா வரவேற்பில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரையாற்றுகிறார். குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன் முன்னிலை வகித்தார்.

இம்மணவிழா வரவேற்பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

இம்மணவிழா வரவேற்பில் குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி வந்தேமாதரம், வ.நந்தகோபால் , சி. பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ். கர்ணன், குமுதா சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, சங்கீதா, வேலு, வி.எஸ்.கோதண்டராமன், என்.எஸ். இளங்கோ,

பா.அறிவொளி, ரா.தீபக்ராஜ், மா.சே.பிரகாஷ், தி. க.பா.ஆடலரசு, பொன். இளையபாரதி, லோ.சுதாகர், அ.ஜமீர் , நா.ஜெகீதசன், ஜெ.கோகுல் ல்நாதன், ஜெ.குணசேகரன், கே.ஆர். ரேவதி, சதீஷ், ரா.பிரதீப், சே.பாலகிருஷ்ணன், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா, நடராஜன், ஜி.இருசப்பன், ம.அசோக் குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ராஜலட்சுமி, ராஜி, வீ.சுதாகர் , சாவித்திரி சந்திரன், வள்ளி சுந்தர், ஸ்ரீவித்யா ரஞ்சித்குமார், வசந்தி சாம்பசிவம், அ.ராஜன், கோ. தட்சணாமூர்த்தி, ஏ.டி.எம்.வினோத், செல்வி, ரவி, பூங்கோதை, பழனி, மஞ்சுளா , கார்த்திகேயன், இரா.கிருஷ்ணமூர்த்தி, ஆ ச.செல்வம், கோ.பார்த்த சாரதி, ஆர். செல்வமொழி , ஆ.போ. சீனிவாசன், ஆர்.சாரங்கபாணி, எஸ்.சங்கர், ஜெ.ஜெகராபேகம், பி.ஆனந்தராஜ் , ஏ.எம்.சக்கரபாணி, பி.வி.ராஜேந்திரன் , ஆர்.சர்வேசன் , எஸ். கலீல் வி.ராமதாஸ், ஆமோஸ், துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து, பழனிவேல் , க. ரஜினி, பி.முனுசாமி ரவிசந்திரன் கை.ரவி சரவணன் முத்து ராமலிங்கம் ராமலிங்கம் எல்.லோகசுப்பிரமணியன், ஆ.ஸ்ரீதர், சி.பி.மாணிக்கவாசகம், சிவசங்கரன், சரவணன், ஆர்.புயல்ரவி , ராம்சிங், எம்.மோசஸ், ஞா.அற்புதராஜா, த.டேவிட், பா. கவிக்குமார், எஸ்.அருணாகரன், கை. பழனி, பி.வெங்கடேசன், கே.ரவி, ஆர். விஜயா,இ.தாமரைசெல்வி, ஜி.கோமதி, கே.மஞ்சுளா , சரஸ்வதி , எல்.சுமதி, பி.சந்திரா, மாரியம்மாள், நா. சத்யா, தாஹிரா, சௌந்தரி, சர்மிளா, சே. காமாட்சி, ரஹமத் தெரசா, காந்திமதி, இலட்சுமி, பிரபா, ச.ஜானகி, கே.மல்லிகா, எஸ்.பிரியா, சி.ரேணுகா, எ.சோனியா , டி.ஹேமமாலினி, வி.சுமதி, எம்.ஜெயலட்சுமி, பா. ஜான்சி, அ.ஸ்ரீதர், வே. தியாகு த. டேனியல், பி.சீனிவாசன், இலட்சுமி, நாராயணன், பா.காளிமுத்து, எம்.கார்த்திக், எம். சந்தான கிருஷ்ணன், கோ. நாராயணன், ப.சுரேஷ், அ.பிரசாந்த், கே.தருமன் , வி.அசோக்குமார், பி.தமிழ்செல்வன்,

டி.புருஷோத்தமன், சு.ராஜ்மோகன், ர.அருள்ராஜ், எம்.கரண், எம்.பரத், ஸ்டிபன்ராஜ், ஆர்.சத்திஷ்குமார், சே.விக்னேஷ் , அ.சுரேஷ், ஆர்.தினேஷ், எம்.கோபி, வி.தியாகு, எஸ்.மோகன், சி.ஹரிநாராயணன் , எ.ஸ்ரீஹரி, கே.தர்மன், எம்.ராஜேஷ், வி.தீபக், ஜெ.செல்வம், பா.காளி முத்து, டி.லியோ, ஆர்.அருள்ராஜ் , டி.மணி, எஸ்.விக்கி, எம்.பாலாஜி உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்தினர்.



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி களப் பணியாளர்கள் ஆலோசனைக்கூட்டம் தொகுதி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதி செயலாளர் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, கழக இளம் பேச்சாளர் ரோஜா, வட்டக் கழகச் செயலாளர் டி.சதீஷ்குமார் மற்றும் துறைமுகம் தொகுதி மகளிர் நிர்வாகிகள் மற்றும் மகளிர் களப்பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.